Nallur Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 22 ஜூலை 30 இதழ் 178

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-8-1986

அமைச்சர் 'தேவா' வீட்டு மதிலில்

## கடத்தப்பட்ட ஆசிரியரின் சடலம் கட்டப்பட்டிருந்தது!

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

செங்கலடியில் கடத்தப்பட்ட 9 பிரமுகர்களில் சித்தாண்டிகுடியைச்சேர்ந்த 52 வயதான ஆசிரியர் பி. சிவலிங்கத்தின் சடலம் செங்கலடியில் உள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகத்தின் வீட்டு மதில் சுவரில் கட்டடப்பட்டிருந்தது. இவரின் சடலத்தில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

கட்டப்பட்டிருந்த இச்சடலத்தின் முன்னால் ''அமைச்சர் தேவநாயகத்துக்கு வரவேற்பளிப்பதில் முன்னின்று செயல்பட்ட தமிழினத்துரோகி'' என்ற வாசகம் பொறிக்கப்படடதாக அட்டை ஒன்றும் தொங்கவிடப்பட்டிருந்தது.

மேலும் கடத்தப்பட்டவர்களுள் இருவரான புகைப்படப்பிடிப்பாளர் மகேந்திரன். சின்னத்தம்பி போடியாரின் கணக்குப்பிள்ளை கோபாலரத்தினம் ஆகிய இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க நேற்றுக்காலைகிழக்கிலங்கை ஊர்ப்பணி மன்ற பொதுச்செயலாளரும்

[4-ம் பக்கம் பார்க்க]

● திருமலை துறைமுகத்தில்

# 6 வாகனம் தீக்கிரை; படகுகள் குண்டுவைத்து தகர்ப்பு!

## 68 லட்ச ரூபாய் நஷ்டம்

### ஈ. பி. ஆர். எல். எவ். உரிமை கோருகிறது

(மூதூரிலிருந்து நமது நிருபர்)

**திருமலை துறைமுகத்தின் 'மட்கோவ்' பிரிவினுள் நேற்று அதிகாலைஉட்புகுந்த இனந்தெரியாத இளைஞர் குழுவொன்று அங்கிருந்த 6 வாகனங்களை எரித்ததுடன், இழுவைப்படகொன்றையும், 'லோஞ்ச் ஒன்றையும் குண்டுவைத்துத்தகர்த்தனர் பின்னர் அங்கிருந்த ஏழு துப்பாக்கிகளையும் சக்திவாய்ந்த தொடர்பு சாதனங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.**

**இவற்றின் பெறுமதி சுமார் 68 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.**

நேற்று அதிகாலை 1-45 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது 'மட்கோவ்' பிரிவினுள் உட்புகுந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி, அங்கிருந்த தொழிலாளரை அறையொன்றினுள் வைத்துப் பூட்டிவிட்டு வளவினுள் தரித்து நின்ற 3 லொறிகள், இரு மினி பஸ்கள், ஒரு ஹை-ஏஸ் வான் ஆகியவற்றிற்குத் தீவைத்தனர். பின்னர் ஒரு இழுவைப்படகையும், 'லோஞ்' சையும் குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

இவ்விளைஞர் கோஷ்டி புறப்பட்டுச் செல்லும்போது அலுவ

[5-ம் பக்கம் பார்க்க]

### யாழ் வரும் உரக்கப்பல்

யாழ்ப்பாணம், வியாழ. 2500 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிக்கொண்டு கொழும்பில் தற்சமயம் நிற்

[8ம் பக்கம் பார்க்க]

## மாணவி மீது 'ராகிங்' 'புலிகள்' விசாரணையில்மூவர்

யாழ்ப்பாணம்,வியா. யாழ். பல்கலைகழகத்தின் முன்னால் உள்ள வீதியில் வைத்து புதியமாணவி ஒருவரை ராகிங் செய்ததாகக் கருதப்படும் மூன்று மாணவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் விசாரணைக்குட்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட மாணவியின் மனதைப் புண்படுத்தும் வகையில் சப்பந்தப்பட்ட மாணவர்கள் வார்த்தைப் பிரயோகம் மேற் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

முன்னதாக இன்றைய போராட்ட சூழலில் 'ராகிங்' சேஷ்டைகள் வேண்டாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தது தெரிந்ததே. [மா]

### வெளிநாட்டு நிருபர்கள்

யாழ்ப்பாணம், வியாழ. லண்டன் பி பி சி., சண்டே ரைம்ஸ், எகனோமிஸ்ட், ஆகியவற்றின் நிருபர்கள் யாழ்ப்பாணம் வந்து தங்கிநின்றபின் நேற்றுத் திரும்பிச்சென்றனர். (ஷ-இ)

### 'லண்டனில் காண்டீபன் கைது!'

கொழும்பு, புதன் த.வி கூட்டணிசெயலதிபரின் மகன் திரு காண்டீபன் அமிர்தலிங்கம் அனுமதியின்றி றிவோல்வர் ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பிரிட்டிஷ்ஹீத்ரோவிமான நிலையத்தில் கடந்தஞாயிறன்று கைதானதாக கொழும்பிலிருந்து வெளிவரும் தினசரி ஒன்றுதெரிவித்துள்ளது

திரு காண்டீபன் இந்தியா செல்வதற்காக இந்தியன் எயர்லைன்ஸ் விமானமொன்றில் ஏறச் சென்றபோதே பிரிட்டிஷ் பொலிஸார் கைது செய்தனர் என்றும் அத்தினசரி கூறுகிறது' (சி-ஊ)

## அரசுடன் பேச்சுவார்த்தை: பொதுக்குழு முடிவுசெய்யும் —'உமா'

சென்னை, புதன்.

தனிநாடு உருவாவதைத் தடுக்கவேண்டுமானால் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமிழரையும் சிங்களவரைப் போன்று சம அந்தஸ்து உடையவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பொதுச் செயலர் திரு. உமாமகேஸ்வரன் கூறியுள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## புதியயோசனைகளை ஆராய ஈ. தே. வி. மு. மறுப்பு

### ஏ. எவ். பி அறிவிப்பு

சென்னை, புதன்

இலங்கை அரசின் புதிய யோசனைகளை ஆராய ஈழ தேசிய விடுதலை முன்னணி மறுத்திருப்பதாக ஏ. எவ். பி. செய்திஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த யோசனைகள் தமது குறைந்தபட்சக் கோரிக்கையைக்கூட ஈடுசெய்யவில்லையென மேற்படி அமைப்புக் கூறியிருப்பதாக ஏ. எவ். பி. மேலும் தெரிவிக்கிறது.

## ஜனதிபதியின் 'ராணுவத்தீர்வு': ராஜ்யசபை ஆலோசனை நடத்தவுள்ளது

புதுடில்லி, ஆகஸ்ட்7

இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வுகாணப்படவேண்டும் என்ற ஜனதிபதியின் கூற்றுத்தொடர்யாக எதிர்வரும் 16ம் திகதி ராஜ்யசபை ஆலோசனை நடத்தும் என்று சபாநாயகர் திரு. பால் ராம்ஜாக்கர் தெரிவித்துள்ளார்.

அனைத்து இந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக மக்களவைத் தலைவர் திரு. குழந்தைவேலு இது தொடர்பாக விவாதம் ஒன்றை நடத்தவேண்டும் என்று விடுத்த கோரிக்கையை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (எ)

## சட்டவிரோத சாராயத் தவறணைகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது

புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம். வியா. ''சமூகவிரோதக்கும்பல்களை உருவாக்கும் சட்டவிரோத சாராயத்தவறணைகள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளனஎன்றும் அனுமதிப்பத்திரம்பெற்ற அனைத்து சாராயத் தவறணைகளின் உரிமையாளர்களும் தம்முடன் உடனடியாகத்தொடர்புகொண்டு செயற்படுமாறும், 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கபபட்டுள்ளதாவது:-

'தமிழீழ விடுதலைப்போராட்டம்மிகத்தீவிரமடைந்துவிட்ட இன்றைய சூழ்நிலையில் தமிழீழப் பிராந்தியங்களின் சிவில் நிர்வாகம் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்து விட்டது. இந்நிலையில் தமிழீழத்தில் சட்டம், ஒழுங்குகள் சீர்குலைந்து வருகின்றன. சமுதாய ரீதியில் முழுச்சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய செயற்பாடு

(5-ம் பக்கம் பார்க்க)

## ''இனப்பிரச்னைக்கு அரசை எதிர்ப்போருடன் பேச்சு நடத்தி தீர்வுகாணுங்கள்' ஜப்பானிய பிரதமர் வேண்டுகோள்

ரோக்கியோ, புதன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசை எதிர்ப்போருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி தீர்வொன்றைக் காணவேண்டும். என ஜப்பானிய பிரதமர் திரு நாகஸோனே இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாஸாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது ஜப்பானில் தங்கியுள்ள திரு. பிரேமதாஸா ஜப்பானியப் பிரதமரைச் சந்தித்தபோதே ஜப்பானியப் பிரதமர் இவ் வேண்டுகோளை விடுத்தார். வட அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட பிரதமர் பிரேமதாஸ நாடு திரும்பும் வழியில் ஜப்பான் சென்றிருந்தது தெரிந்ததே. இலங்கை திரும்பு முன்னரே திரு பிரேமதாஸ ஹொங்கொங்கிற்கும் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். [ஊ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M. 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna Telephone 22611. (A 920)

மானிப்பாய் மேற்கில் வீடும் வளவும் வெறும் காணியும் விற்பனைக்கு விபரத்திற்கு: ஜீவன் ரவல்ஸ். 9-00—12-00 மணி வரை யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக, நவீன சந்தை, மேல்மாடி. C 3900

கொழும்புத்துறையில் இந்து மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் நல்ல சூழ்நிலையில் 3 பரப்பு வெறும் காணியும், கொட்டடி வில்லூண்டி பிள்ளையார் கோவிலடிக்கு அருகாமையில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு Mack Auctioneers, No 8, 1 st Lane, Point Pedro-Road. Jaffna. Tel. 24791, 24836 (C 3916)

வெளிநாடு செல்பவர்களின் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், கட்டில் மெத்தைகள், பியானோ எக்கோடியன், சிங்கர் தையல் மெஷீன், டெக்செற் T. V. டெக், Show Case கண்ணாடி மேசைகள், Meat Safe, Formica சாப்பாட்டு மேசைக் கதிரைகள். கிளாஸ் வகைகள், சில்வர் பொருட்கள் மின்விசிறிகள் மற்றும் பல உடன்விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்) (C-3895)

## வகுப்புகள்

108, Brown Road, AL/ 88 பொது இரசாயனம் பிரிவு II ஆரம்பம் 8-8 86 வெள்ளி 4-45 P.m. ஆசிரியர் சத்தீஸ் (திங்கள், புதன், வெள்ளி 4-45 p. m.) C3791

Electronic Engineering, Radio and T V. (Antenna Deck) தட்டெழுத்து சுருக்கெழுத்து, வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங் 9-8-86 புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதி வாய்ந்தது. வெளிநாடு செல்பவர்கட்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-3898)

A/L (87) முழு வியல்- ஆரம்பம் 9-8-86 Sat and Sun. 8-30-9-30 ஆசிரியர் தம்பிராஜா, 3rd Cross Street, Jaffna (P.M.C. முன்பாக (C 3914)

## தேவை

10 x 8 - 11 x 9 இரு அளவுள்ள பலகைக் கதவுகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். கணேசன் ஸ்ரோர்ஸ், 63 K. K. S. ரோட், யாழ்ப்பாணம். (C 3903)

## தவறிவிட்டது

தாவடியைச் சேர்ந்த கந்தையா இராசரெத்தினம் என்பவருடைய மூக்குக்கண்ணாடி தாவடிக்கும் மருதனைமடத்திற்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமை காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தாவடி சீக்கோ நிறுவனத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C 3913]

## கேள்விப்பத்திரம்

மாட்டு, ஆட்டு இறைச்சிக்கடை சண்டிலிப்பாய் மத்திய மக்கள் சந்தையில் கேள்விப் பத்திர மூலம் வழங்கப்படவுள்ளது. விரும்பியவர்கள் 10 - 8 - 1986 அன்று எழுத்து மூலம் நேரில் காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் வாணி நிகேத வித்தியாசாலையில் இயங்கும் விழிப்புக் குழு முன் விண்ணப்பிக்கவும்.

**விழிப்புக்குழு.**
செயலாளர்.

(C 39'8)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

துன்னாலை தெற்கைச் சேர்ந்த கந்தையா தவபாலசிங்கத்தின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் சம்பத்துக்கள் சம்பந்தமாக

தவபாலசிங்கம் சிவதேவரத்தினம், துன்னாலை தெற்கு,
- மனுதார்

இல: T. 1239

எதிர்

1 தவபாலசிங்கம் தபோதயன்,
2 தவபாலசிங்கம் தபோதரன்,
3 தவபாலசிங்கம் தபோதினி,
4 தவபாலசிங்கம் தபோநிதி துன்னாலை தெற்கு பிரதிவாதிகள்.
5 சுவாமிநாதர் கந்தையா துன்னாலை தெற்கு 1 - 4 பிரதிவாதிகளின் பாதுகாவலர்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் மேற்சொல்லப்பட்ட பராய மடையாத 1 - 4 பிரதிவாதிகளின் பாதுகாவலராக 5ம் பிரதிவாதி நியமிக்கப்படுவார் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் அண்டு புரட்டாதி மாதம் 19-ம் திகதிமு ப 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1986 ம் ஆண்டுஆடி மாதம் 21 ஆம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
**சண்முகம் நடராசா.**
பதிவாளர்.

வரைவு.
பெ. செ. பாலசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
(C 3912)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொககுவில், கொக்குவில் கிழக்கில் வசித்த காலஞ்சென்ற தம்பு கந்தையா பெண் நல்லம்மா என்பவரின் மரணசாதன சொத்துக்கள் விடயமாக.
மரணமெய்தியவர்.

வழ இல. தத்துவம்/3976
தம்பு கந்தையா றமீஸ்வரா, இலினொஸ்சி,

இவர் தனது அற்றோணித் தத்துவகாரன் தாவடியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை தம்பு கந்தையா மூலம்.
மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டதுயான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 8ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 29ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைந்தது:
வ. மயில்வாகனம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 3893

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. T/1240
மரணசாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற துன்னாலைவடக்கு வீரகத்தி நடராசாவின் சொத்து விடயமாக.

1. வல்லிபுரம் இராசரத்தினம் கைம்பெண் மசேஸ்வரி - துன்னாலை வடக்கு.
மனுதார்

எதிர்

1. கந்தையா கதிரவேற்பிள்ளை
2. பெண் பொன்னம்மா இருவரும் - துன்னாலை வடக்கு.
எதிர்வாதிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த எதிர்வாதிகள் அல்லது அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ஆம் திகதி முற்பகல் 9 30 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றைக் காட்டுமாறு இத்தால்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1986ம்ஆண்டு ஆடி மாதம் 29ம் திகதி.

நீதிமன்றக் கட்டளையின்படி
சண்முகம் நடராசா
பதிவாளர்

வரைவு:
வ. கு. கணபதிப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
C 3881

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அறிவித்தல்

திருமதி தியாகராசா பொன்னம்மா என்று இதுவரை காலமும் வழங்கிவந்த எனது பெயரை 23-07-1986 தொடக்கம் திருமதி தியாகராசா பசுபதி என மாற்றியுள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்.

மிருசுவில் வடக்கு, மிருசுவில். — திருமதி தி. பசுபதி.
[C-3917]

## VACANCY

Assistant Lecturer / Instructor in "Electronics and Communications". Candiates should have a recognised degree or equivalent and have practical experience in teaching the above subjects at minimum Tcchnician level.

Salary : About Rs. 1,500/- p. m., negotiable.

Apply before 15-8-86 to Director J. C. T. I., Vaddukoddai.

(A-1'06)

## உருக்கமான வேண்டுகோள்

13-06-86 அன்று இரவு 10 மணியளவில் கைதடி பாலத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் எனது 86 சிறி 9832 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை திருப்பித் தருவதாகக் கூறி வாங்கிச்சென்றனர். இதுவரைக்கும் கொண்டுவந்து தரவில்லை. தயவு செய்து எனது குடும்ப கஷ்ட நிலையை உணர்ந்து அதை மீண்டும் கொண்டுவந்து தருமாறு மிகவும் பணிவாக வேண்டுகிறேன்.

இங்ஙனம்
**வ. பத்மநாதன்,**
மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[C-3906]

## சவூதி அரேபியாப் பிரயாண ஒழுங்கு [Jubail Harbour]


சவூதி அரேபியாவில் JUBAIL துறைமுகத்தில் (LABOURER) தொழிலாளர் தரத்தில் வேலை செய்ய விரும்புபவர்களுக்கு இம்மாதம் 23-ந் திகதியும், 27-ந் திகதியும் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் பாஸ்போர்ட், 6 படங்கள் என்பனவற்றுடன் தாமதியாது கீழ்உள்ள முகவரியில் வந்து சந்திக்கவும்.

முகவரி:- **K. M. வைத்தீஸ்வரன்,**
கச்சாய் வீதி, கொடிகாமம்.

முக்கிய குறிப்பு:- (25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.)
[C-3884]

## நினைவஞ்சலி

1-ம் ஆண்டு — 31-ம் நாள்



திரு. செல்லையா தம்பையா.
மலர்வு: 19-10-1926
உதிர்வு: 19-07-1985



திருமதி பவளலஷ்மி தம்பையா.
மலர்வு: 12-06-1941
உதிர்வு: 06-07-1986

அன்பின் உருவாய் அறிவின் சுடராய், பண்பின் நிறைவாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வங்களே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு எமது இதயத்தை விட்டு என்றென்றும் பிரியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், உறவினர்கள்.**

தண்ணீரூற்று, முள்ளியவளை. (C-3911)

### மணி வாக்கு

இனக்கருத்து மிகவும் வலுத்து வருவதால் என்றே ஒருநாள் கிறிஸ்துவே ஒரு ஆசியாக்காரர் என்று விலக்கினாலும் விலக்கப்படுவார்.

—சுவாமி துரியானந்தர்

## நமது நோக்கு

### விஞ்ஞானக் கல்வியின் உயிர்: உயிரியல்

அழியும் பாங்குடையது மனித உடல்; இந்த நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் தினசரி இந்த உண்மை உறுதிப்படுத்தப் படுகிது.

வீட்டிலும், ரோட்டிலும் வேலைத்தலத்திலும், பிரயாணத்திலும் மக்கள் கொல்லப்படுகின்றனர். சடலங்களை மீட்பதும் சிரமம், மீட்ட சடலங்களின் அங்கங்கள் மிகச் சாதாரணமாக வீசப்பட்டும் அரைகுறையில். எரிக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இந்த அவலநிலை, உயிரியலுக்கோ, உடலியலுக்கோ எத்தகைய மதிப்பு அளிக்க உதவாது. இருப்பினும் மனிதஉடல் ஒன்றுக்கும் உதவாதது என்று சொல்லி விடமுடியாது.

திருமந்திரத்தில் வரும் பாட்டு இதற்கு சான்றுகின்றது.

'உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளேயுறு பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே'

எத்தனைவித வல்லமைகள், எவ்வளவுசக்தி, எத்தகைய விசைகள் மனித உடம்பில் மறைந்திருக்கின்றன! மனிதன் மண்ணுலகில் வந்து யுகங்கள் பல கடந்து போய்விட்டன. ஆனால் அவனுக்குரிய வல்லமைகளில் அணுவளவுக்குமேல் இன்னும் வெளியாகவில்லை.

ஒருவரை ஒருவர் கொல்லும் சாதனை மிகப்பெரிதென மதிக்கப்படுவதில்லை. போரிலும் வெற்றி. படையினரின் கொலை வல்லமையால் அமைவதில்லை. உடம்பில் இன்னும் மறைந்திருக்கும் சக்தி அளப்பரியதென்று எண்ண இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி மட்டுமல்ல தமிழ்மறைகளும் சைவ சித்தாந்தமும் அன்றே வழி வகுத்திருக்கின்றன.

திருமூலர் உணர்த்திய இந்த உண்மையே இந்திய பிரபல விஞ்ஞான டாக்டர் வீ ராமலிங்க சுவாமி அண்மையில் கொழும்பில் நிகழ்த்திய பேருரையில் காணப்படுகிறது

இந்திய மருத்துவ ஆராய்ச்சிச்சபையின் பெருந்தலைவர் டாக்டர் வீ. ராமலிங்கசுவாமி இலங்கை விஞ்ஞானிகளுக்கு ஆற்றிய ஆராய்ச்சிப் பேருரையில், இன்றைய விஞ்ஞானக் கல்வியின் பெருங் குறை ஒன்றைத் தொட்டது மட்டுமல்ல பிட்டுங்காட்டியிருக்கிறார்.

வளர்ச்சியடையும் நாடுகளில் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி உயிரியலுக்கு இடமளிப்பதில்லை. பலதும் சேர்ந்த பொது விஞ்ஞான 'அச்சாறில்' உயிரியலுக்கும் ஒரு 'மைனர்' இடமளிக்கப்பட்டு வருகிறது.

இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் உயிரியலில் பரந்து விரிந்த ஞானம் பெற்றிருக்கின்றன. அந்த நாடுகள் கண்ட விருத்தி எத்தகையதென்று அறியாததின் விளைவே நாம் இங்கு உயிரியலை உதாசீனம் செய்வதென்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழரின் தனிப்பெரும் தெய்வம் முருகனென்பதால் இளமையும் அழகுமுடையவனே தங்களைக் காக்க முடியுமென்று உணர்ந்த ஞானிகள் பலர். அவர்களில் இருவர் - தேவராய சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முறையே அருளிச் செய்த கந்த சஷ்டிகவசம், சண்முக கவசம் - மனித உடலின் ஒவ்வொரு அங்கத்துக்கும் பாதுகாப்புக் கோரி நிற்கின்றன.

இவற்றைப் பாராயணம் செய்யும் அடியவர் பலருக்கு அங்கு கூறப்படும் உறுப்புக்கள், அவற்றிற்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் தெரியாமலிருப்பது சகஜம்; ஆனால் கவசங்கள் இரண்டும், இன்று இந்திய விஞ்ஞானி குறிப்பிடும் கருத்துக்கு-பரந்து விரிந்து உயிரியல் அறிவு-ஆதாரமளிக்கின்றன.

எங்கள் சிரேட்ட பாடசாலைகளில் உயிரியல் மிகப் பரந்த அளவில் படிப்பிக்கப்படவேண்டுமென்ற டாக்டர் ராமலிங்க சுவாமி, மேனாட்டு ஆராய்ச்சிகளுக்கு நாம் காத்திருக்க வேணடியதில்லை என்ற எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

உயிரியல் ஆரம்பத்திலேயே செம்மையாகப் பயிற்றப்பட்டால் சுகாதார வாழ்வின் இரகசியம் மிக இலகுவாகக் கிட்டுமென்பதை நன்றாக வற்புறுத்தியிருக்கிறார்.

சுகாதாரம் என்பது நோயற்ற வாழ்வென்ற எதிர்மறைக் கருத்தை நிராகரித்த ஆராய்ச்சிப் பிரமுகர், நோயைத் தடுக்கும் வழிகள் மட்டுமல்ல, சுக வாழ்வுக்குரிய சத்துணவு, தூயநீர், சுத்தமான சூழ்நிலை, இந்தப் படிப்பில் பரந்து விரிவடையவேண்டுமென்கிறார்.

எவ்வாறு விருத்தியடைந்த நாடுகள் தங்கள் ஆராய்ச்சியை முன்னெடுத்துச் செல்கின்றனவோ, அவ்வாறே நாமும் எங்கள் அன்றாட வாழ்வுக்குரிய வசதிகள் பற்றி ஆராயும் ஆற்றல் பெறவேண்டும்.

விஞ்ஞானக்கல்வி ஏட்டுச் சுரைக்காயாக இருக்கலாகாது. ஆனால் புது அறிவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் இறக்குமதிப்பண்டங்களென்ற கொள்கை விடப்பட்டு எமது பாடசாலைகளிலேயே எமது தேவைகளுக்குரிய ஆராய்ச்சி ஆரம்பமாகவேண்டும்.

### திருவிளக்கு பூசை

யாழ்ப்பாணம், வியாழன் நவாலி அட்டகிரி கந்த சுவாமி கோவில் திருவிளக்கு லட்சுமி பூசை நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. (வா)

# குண்டுவீச்சின் பின் வல்வை

வல்வை இராணுவ முகாமுக்கு மேற்கே இருக்கும்ஊர்களில் மண்ணுச்சி மணல் முக்கியமானது. அழகான தென்னைமரங்கள், மீன்பிடித்துறைமுகம் கொண்ட அழகான ஊர்.

சோடாத் தொழிற் சாலை, சுப்பிரமணியத்தார் என்றால் இவ்வூரையே குறிக்கும். வடபகுதி மக்களுக்கு நல்லதாக சாந்தி செய்து தந்த இந்தத் தொழிற்சாலை கை விடப்பட்டிருக்கின்றது. ராணுவ முகாமிலிருந்து அடிக்கபபடும் ஷெல், கடலில் இருந்து ஏவி விடப்படும் பீரங்கிக் குண்டுகள் இத்தொழிற்சாலைஅருகே விழுந்த அடையாளங்கள் தென்படுகின்றன. இத்தொழிற்சாலையில் வேலை செய்

பெயர்ந்து விட்டார்கள்? இவ்விடத்தைச் சேர்ந்தகுமாரசாமி என்பவர் சளம் கட்டி மீன்பிடிக்கச் சென்றபோது இராணுவத்தால் படுகொலை செய்யபபட்டார். இதைவிட

போனோம். சில பகுதிகளை ஓடிப்போய் அடைந்தோம். மயிலியதனையில் ஒரு கிடங்கு இருக்கின்றது. அந்தக் கிடங்கில் இறங்கிப் பார்த்தால் ஒருவழி நேரே வடக்கேபோகி

- ✱ மயிலியதனையில் மனிதர்களே இல்லை
- ★ மண்ணுச்சிமடல் வெறிச்சோடியது
- ✱ சின்னமலையில் மக்கள் இடம் பெயர்வு
- ✱ வல்வையிலிருந்து பருத்தித்துறை வரை 'ஷெல்' வெடிப்புகள்

நில அளவையாளர் ஞானகுருவின்மகன், தங்கப்பாப்பா நவரத்தினம் என்பவரின் வேலையாள் மூவரும்வெளியே போனவர்கள்தான்! இன்று வரை வீடுதிரும்பவில்லை.

ன்றது. ஒரே இருள்மயம். விஷயம் என்னவென்றால் இந்தவழி நேரே கீரிமலைக்குப் போகின்றதாம். ஏனப்பா வீண்வம்பு என வெளியேறி விட்டோம்!

மயிலியதனையில் எல்லா மக்களுமே வெளியேறிவிட்டார்கள். பருத்தித்துறை முன்னாள் எம். பி திரு க. துரைரத்தினம், முக்கிய பிரமுகர் காஞ்சிமாவடிவேல் வீடுஎல்லாமே காலியாக இருக்கின்றது. திரைகடல் ஓடித் திரவ்யம் சேர்தது வீடும் வாசலும் கட்டிப் பீரங்கிக் குண்டுக்கு இரையாக்க வேண்டிய துர்ப்பாக்கியம். இந்தத் தமிழ்மக்களுக்கு ஏறபட்டிருக்கிறது

#### சின்னமலை நோக்கி

பின்னர் அங்கிருந்து சின்னமலைக்கு கஷ்டப்பட்டு இளையதம்பி மேஸ்திரியார் வீட்டடிக்குச் சென்றோம். எத்தனையோ குடும்பங்கள் வாழ்ந்த சின்னமலையில் 20 குடும்பங்களே வாழ்கின்றன. ''லேடி ரீச்சர'' என்று இவ்வூர் மக்களால் போற்றப்படும் ஆசிரியைகூட ஊரைக் காலிசெய்துகொண்டு எங்கோ போய்விட்டார் எனச் சனங்கள் கதைத்துக் கொண்டார்கள். இராணுவ முகாமின் கிட்டேயுள்ள வீடுகளில் இருந்து சின்னமலைவரைகுண்டுகள் துளையாத இடங்களே இல்லை. பல இடங்களில் ''ஷெல்'' தாக்கி இரண்டு துண்டாக முறிந்த மரங்களைக் கண்டோம். ''சிலஇடங்களில் கண்ட ''ஷெல்'' பொறுக்கி வைத்திருக்கின்றோம், தகுந்த சமயத்தில் விற்பனைசெய்தால் நல்ல பணம்கிடைக்கும் என்றார் என்னுடன் வந்தவர்.

மயிலியதனை என்ற இடத்துக்கும் கெருடாவிலுக்கும் இடையே நீலாந்தனை என்ற குடியேற்றம் இருக்கின்றது. குண்டு வீச்சாலோ ஷெல் அடிகளாலோ இவர்கள் கஷ்டம் அடையாவிட்டாலும் தொழில் செய்ய வழியின்றி



### செல்லரிக்கப்பட்ட நிலையில் 'ஷெல்' விழுந்த குடும்பம்

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லால் உருக்குலைந்து போனகுடும்பம் ஒன்றை இங்கே காண்கின்றீர்கள் பருத்தித்துறை, தம்பசெட்டி இவர்களுடைய சொந்தஊர். 30 - 6 - 86 தினம் 'ஷெல்' லுக்குப் பயந்து இவர்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள். ஆனால் அங்கும் 'ஷெல்' விழுந்தது.

இக்குடும்பத்தின் ஒரு பிள்ளையான 11 வயதுச் சிறுமி தமிழ்ச்செல்வி அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமடைந்தார். தாய் திருமதி செல்வராணி, புதல்விகள் சுஜாதா, பாமினிதேவி ஆகியோர் காயங்களுக்குள்ளானார்கள். மூத்தமகன் ரவிச்சந்திரன் அதிர்ச்சிக்குள்ளானார்.

இவர்களுக்கு உதவவிரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறுபுலோலிமேற்கு மாதர்சங்கத்தலைவிதிருமதி மகேஸ்வரி பாலசுப்பிரமணியம் கோருகின்றார்.

படம்; புலோலி நிருபர்

தவர்கள் யாவருமே மிகப் பெரும் கஷ்டம் அடைந்துள்ளனர்.

இத்தொழிற்சாலைக்கு அப்பால் நகர்ந்து செல்கின்றோம்.

இக்கிராம மத்தியில் இருந்த 200 தென்னைமரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பயலால் மரங்கள் வீழ்ந்து இருப்பது போன்று பீரங்கி அடிகளால் வீடுகள் வீழ்த்தப் பட்டிருக்கின்றன. சிலவீட்டின்சுவர்களோ அம்மி பெழிந்தது போல குண்டுகளால் துளைக்கப்பட்ட அடையாளங்கள் இருக்கின்றன. 50க்கு மேற்பட்ட வீடுகள் கைவிடப்பட்டிருக்கின்றன

இஸ்ரவேலியரின் படையெடுப்புக்கு அஞ்சி ஜோர்தான் ஆற்றங்கரையில் கைவிடப்பட்ட பலஸ்தீனியக்குடியிருப்புக்கள் போன்று அவை காட்சியளிக்கின்றன.

#### பாவம் சந்தானகிருஷ்ணன்

இந்தப் பகுதியிலே தமிழகம் என்று ஒரு வீடிருக்கின்றது இந்த வீட்டின் உரிமையாளர் சந்தான கிருஸ்ணன் அவர் அந்தவீட்டினை விட்டு வெளியேறி வல்வெட்டித்துறைக்குச் சற்றுத் தூரத்தில் வந்துவிட்டார் ஒருமுறை அவர் வல்வெட்டித்துறை அம்மன் கோவிலுக்கு வந்தபோது ராணுவம் பிடித்துக் கொண்டது. அதுமாத்திரமல்ல பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது போல அவருக்கு 22 கத்திக் குத்துக்கள்பரிசாக வழங்கப்பட்டதாம். மக்கள் சொன்னார்கள்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த 1000 பேர்எங்குஎல்லாம்இடம்

இதிலே தங்கப்பாப்பா வெளிநாடுசெல்லதற்கு என்று சேகரித்த பணமும் பருத்தித்துறை வங்கியில் இருக்கின்றது. மகன் வந்து காசு எடுத்தானா என்று தங்கப்பாப்பா

● களஆய்வு

### திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

வின் தாய் பருத்திம்துறைக்குப்போய் வருவாள்! தாயுள்ளம் அல்லவா?

இதற்கு மேலாக இவ்விடங்களுக்கு அருகேயுள்ள பன்னையடிவான் என்ற இடத்தில் மொத்தம் 2 கோடிரூபாபெறுமதியான பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்து மயிலியதனை நோக்கி ஒளித்து ஒளித்துப்

வறுமையில் வாடுகின்றார்கள்.

அப்பால் கெருடாவில் என்ற இடத்திற்குச் சென்றோம். மரமுந்திரிகைத் தோட்டமும் கோழிப்பண்ணைகளும் நிறைந்த அழகானஊர் இது. இந்த ஊர் தொண்டமனாறுக்கு அருகே வருகின்றது. இவ்வூர் தொண்டமானாறு இரா

(4ம் பக்கம் பார்க்க)

### தையல்நாயகி திருப்பள்ளி எழுச்சி

ஈண்டினிய மானிடமாம் பிறப்பெடுத்தோம் எனினும்
எமது நலன் ஏதென்றே நாமறியோம் என்றே
வேண்டுகின்ற அடியவர்க்கு வேண்டியன நல்கும்
வேதத்தின் உட்பொருளே தையல்நாயகியே
தூண்டுமுயர் பக்தியினால் நின்னடியே தொழுத
தூய பெருங்குலத்துதித்த கண்ணம்மை ஆச்சி
நீண்டபெரும் திருப்பணியில் நின்னுள்ளம் மகிழ்ந்தாய்
நின்பாதம் தொழுகின்றோம் பள்ளி எழுந்தருளாய்.

- ம. பார்வதிநாதசிவம்

★ இன்று வண்ணை தையல்நாயகி அம்பாள் தேர்த் திருவிழா காலை 9 00 மணிக்கு பூஜை ஆரம்பித்து 9-15 மணிக்கு ரதாரோகணம், மாலை 3 மணிக்கு ரத அவரோகணமாகி, அம்பாள் ஆலயம் சேர்தல், இரவு கேடகம்.

# மரண அறிவித்தல்

## K. V. கனகரத்தினம்

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அரசாங்க அரிசிக்களஞ்சியப் பொறுப்பதிகாரியாயிருந்து இளைப்பாறிய விசுவலிங்கம் கனகரத்தினம் 6-8-86ல் காலமானார். இவர் விக்கினராசாவின் தகப்பனுரும், திருமதி முத்தம்மாவின் அன்புக் கணவரும் செல்வி. சுலோச்சனுவின் தகப்பனுருமாவார். இவரின் ஈமக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் 7-8-86 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெறும். இத் தகவலை உற்ருர், உறவினர், நண்பர் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர் 64/2, வைமன் வீதி, நல்லூர். [C 3928]

## ச. கந்தையா

(இளைப்பாறிய (P. W. D.) ஓவசியர்)

ஆனைக்கோட்டையைச்சேர்ந்த இளைப்பாறிய P.W.D. ஓவசியர் சபாபதிப்பிள்ளை கந்தையா காலமானர். இவர் சரஸ்வதியின் கணவரும், கருணுகரன் (பிறிமா தொழிற்சாலை திருகோணமலை), சிவராஜா (விரிவுரையாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), சொர்ணதேவா, மஞேகரன் ஜேர்மனி), பாஸ்கரன் (Sky Lark), ஆகியோரின் தந்தையும், நந்தாவிலைச் சேர்ந்த காலஞ் சென்ற தபபு. நாகம்மா ஆகியோரின் மருமகனும், நடராசா, சின்னத்தங்கச்சியம்மா ஆகியோரின் மைத்துனரும், திருவருட்கரசி, வேதநாயகி, மஞ்சுளா ஆகியோரின் மாமனுரும், திவாகரன், பிரபாகரன், கோபிதா, தட்சாயினி, மாதுர்யா, துசாந்தினி ஆகியோரின் பேரனும், அன்னலட்சுமி காலஞ்சென்ற நாகலிங்கம் ஆகியோரின் சகலனுமாவார் அன்னரின் ஈமக்கிரியைகள் நாளை 8-8-86 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் ஸ்ரேசனடி,
ஆனைக்கோட்டை.

(C-3931)

## சோமசுந்தரம் இரவீந்திரநாத் (நவாலி)

திரு. சோமசுந்தரம் இரவீந்திரநாத் அவர்கள் 1986 08-05 ல் காலமானுர். இவர் கொழும்புத் திட்ட முன்னுள் செயலாளரும், காலஞ்சென்ற சட்டத்தரணி ம. சோமசுந்தரம் [நாவலை] தம்பதிகளின் புதல்வரும், சிறுப்பிட்டி வடக்கு சிவனேஸ்வரியின் அன்புக்கணவரும், சிரஞ்சீவி நடராசா (சவூதி), சஞ்சீவி சௌந்தரநாயகம் [பங்களூர்], நந்திவர்மன்-மகாதேவன் [பங்களூர்] அமுதம் நெறியனந்தம், சொர்ணலட்சுமி [மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr. நடராசா, பேராசிரியர் சௌந்தரநாயகம் (பங்களூர்) மகாதேவன் (முன்னுள் துறைமுக ஆணைக்குழு ஆணையாளர்), லஷ்மிஆகியோரின் சகோதரரும், ஜெயசாந்தியின் (யாழ்ப்பாணக் கல்லூரி) அன்பு மாமனுரும் ஆவார்.

அன்னரின் ஈமச் சடங்குகள் அவரின் நவாலி தெற்கு இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ''கொத்துக்கட்டி'' குடும்ப மயானத்திற்கு 1986-08-07 வியாழக்கிழமை பி. பகல் 1-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. ஸ்ரீகந்தராசா,
பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்,
சிறுப்பிட்டி.

(C- 3927)

## விஸ்வலிங்கம் செல்லத்துரை

வேலணை கிழக்கு கூழாதோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய பாடசாலை அதிபர் விஸ்வலிங்கம் செல்லத்துரை காலமானுர் இவர் முத்தம்மாவின் அன்புக்கணவரும் அரியராசா பொலிஸ் அத்தியட்சகர், குகநாதன் (தவம்) ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் (கொள்வனவு உத்தியேககத்தர்) மலர்மகள் (விவசாய ஆராச்சியாளர்மாகந்துல, சண்முகநாதன் (சிவம்) வடபிராந்திய போக்குவரத்துச்சபை காரைநகர், காலஞ்சென்ற செந்தில்நாதன் (செந்தில்), திருமகள் ஆகியோரின் தந்தையும், வில்லியம், புஸ்பகாந்தி, சாந்தி, சிவனேசன் (படவரைஞர், மகாவலி போட்) ஆகியோரின் மாமனுரும், ஓய்வு பெற்றவர்களான பொன்னுத்துரை (அதிபர்) ஐயாத்துரை (விவசாய உத்தியோகத்தர்), கனகரத்தினம் (அதிபர்), நாகரத்தினம் (தபாலதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 7-8-86 வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் 108, அரசடி வீதி, கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

C 3915 மனைவி, பிள்ளைகள்.

## கடததப்பட்ட...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

அமைச்சர் தேவாவின் நெருங்கிய ஆதாவாளருமான ஞானமுத்து (58 வயது) என்பவர் வாழைச்சேனை காகித ஆலைக்கு கடமைக்குச் சென்ற சமயம் இனந்தெரியாத நபர்களால் டத்தப்பட்டுள்ளார். [மா]

## சான்றிதழ் வழங்கல்நிறுத்தம்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ். பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்டுவரும் 'குற்றமற்றவர்' என நிரூபிக்கும் சான்றிதழ் 'கிளியறிங் சேர்டிபிக்கற்' தொடர்ந்து வழங்குவதை மேலிடம் தற்காலிகமாக நிறுத்தும்படி அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ச-இ)

## 45-வது நாள் நினைவஞ்சலி



### ஸ்ரீரங்கநாதன் முருகதாஸ்

தோற்றம்: 5 - 4 - 1962
மறைவு: 25-6-1986

ஆசைக்கொரு மகனுய் ஆண்டவன் தந்திருந்தான் பாசத்தால் பிணைந்திருந்தான் பறித்தானே பரிதவிக்க! ஆசைகள் பலவோடு ஆண்டிருக்க நினைத்திருந்தான். விதியாற் சென்ற மைந்தன் வீடுவந்து சேரவில்லை பாதியிலே அவனுயிரைப் பறித்தானே காலதூதன் தங்கைதன் உயர்வாழ்வைக் காணவே கருதி நின்ருன் தன்னுழைப்பால் பலர்துயரம் துடைக்கவே துணிந்திருந்தான் கனவிலும் நாம் மறவோம் கணந்தானும் உன்நினைவை நனவிலும் மயக்குதுந்தன் நன்நயம் சேர் மொழிகளையா! நித்திரைக் கண்ணிலேயும் நினைவிலேயும் தோன்றுதுந்தன் சித்திரவடிவமதை நாம் சிதைந்தாற்ருன மறப்போம்!

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

உன்பிரிவாற்றுயருறும் ஸ்ரீரங்கநாதன் தம்பதிகள் (பெற்ருர்) ஷாலினி (தங்கை) திருமதி ஜெ. கிருஷ்ணசாமி (பெரியம்மா) வேலாயுதம் தம்பதிகள், லம்போதரன் தம்பதிகள், சிவநேசன் தம்பதிகள், சிவதாசன் தம்பதிகள் (மாமன்மார், மாமிமார்), சுகுமார், டினுஷா, சுபாஜினி. கோகிலா மைத்துனர்.

(C-3930)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## குண்டு வீச்சி. -

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ முகாமில் இருந்துவரும் ஷெல்களால் பாதிக்கப்படுவதாலும், இடையிடையே ஹெலி குண்டு வீசுவதாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு விவசாயியைச் சந்தித்தேன். ''மேலால் வரும் ஷெல்லைமண் வெட்டியால் தடுக்க ஆண்டவன் அருள்புரிவாராக'' என்று செல்லியபடியே வேலையைத் தொடங்கினுர்.

கால்நடைகள் வேகமாக விற்பனை செய்யப்படுகின்றன. கோழிப்பண்ணைகள் கலைக்கப்படுகின்றன. மரமுந்திரிகைத் தோட்டங்கள் கைவிடப்படுகின்றன மக்கள் தாம் வாழ்ந்தவீட்டையும், வளத்தையும் விட்டு அகதிகளாகவெளியேறிக் கொண்டிருக்கின்ருர்கள். குண்டு வீச்சுக்கள் தமிழ் மக்களுக்குத் தந்த பரிசுகள் இவை,

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
### சேனதிசோமசுந்தரம்

(யாழ். / மா. சபை பாதுகாப்பு உத்தியோகத்தர்)

உதயம்: 19-04-1628
உதிர்வு: 13-08-1984

எங்கள் அன்புத்தெய்வமே. எங்களை எதுவித குறையுமின்றி கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தீர்கள். விதியின் விளையாட்டால் நீங்கள் எம்மைப் பிரிந்து ஈராண்டு ஆகின்றது உங்கள் பிரிவால் துன்பக்கடலுள் தத்தளிக்கின்ருேம். எம் நெஞ்சங்களில் நீங்கள் என்றும் தெய்வமாக நிலைத்துள்ளீர்கள். உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிருேம்.

உங்கள்பிரிவால்துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், சகோதரன்,
மைத்துனிமார்,
மைத்துனன்மார்.

தலையாழி,
கொக்குவில். (C-3929)

# மரண அறிவித்தல்

## கந்தையா சபாரத்தினம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட கந்தையா சபாரத்தினம் [ஓய்வுபெற்ற உதவிக் காணிப்பதிவாளரும், Winn Inn Ladies Accadamy உரிமையாளரும்], காலமானுர். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சுதாகரன் [France], நிவாகரன் [Canada], சுகன்யா [Londan] ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற நற்குணர் கந்தையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும். காலம் சென்ற மயில்வாகனம் இராசமணியின் அன்பு மருமகனும், காலம் சென்ற தனலட்சுமி, கமலாலட்சுமி, விஜயரத்தினம் [N. R. T. B, கோண்டாவில்], சொர்ணலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கோபாலபிள்ளை, காலம் சென்ற சதானந்தன், கருணனந்தன் [Londan], மோகனும்பிகை [Londan] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [7-8-86] மாலை 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிருேம்.

61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
இங்ஙனம் திருமதி. சபாரத்தினம் பிள்ளைகள்.
7-8-86 [C-3922]

## அரசுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை தமிழ் மக்கள், அரசுடன் பேச்சு நடத்துவதை எதிர்க்கின்றனர். ஆயினும் தமிழ்மக்களின் இந்த விருப்பத்திற்கு மாருக 'புளட்' இயக்கம் திம்புவில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த நடவடிக்கை ஸ்தாபனத்தைப் பலவீனப்படுத்தியதுடன் ஸ்தாபனத்தின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கவில்லை இது பற்றி ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 5ந்திகதிவரை தஞ்சாவூரிலுள்ள திருவாரூரில்நடநத புளொட்' மாநாட்டில் ஆராயப்பபட்டது'. எனவும் கூறினுர்.

தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள இந்தியா கூறினுல் 'புளொட்' என்ன முடிவெடுக்கும் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு உமாமகேஸ்வரன் பதிலளிக்கையில் ஸ்தாபனத்தின் பொதுக்குழு எடுக்கும் முடிவே அமுல்படுத்தப்படும் எனத் தெளிவுபடுத்தினுர்.

'புளொட்'டின் இந்த மாநாட்டில் 107 பிரதிநிதிகள் பங்கு பற்றினர். அத்துடன் ஸ்தாபனத்தின் பொதுக் குழுவுக்கு 25 உறுப்பினர்களின் தெரிவும் இடம் பெற்றது இந்தப் பொதுக்குழு, தற்காலிக மத்திய குழுவென்றை தெரிவு செய்யும் பொருட்டு இம் மாதம் 10 ம் திகதி தஞ்சாவூரில் கூடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

நன்றி- 'இந்து'

## கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

T யோகராஜா, வைத்திலிங்கம் பசுபதி 19, உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்னும்விலாசமுடைய எமது இரண்டு பாஸ்போட்டுக்களும், விமான ரிக்கற்றுகளும் யாழ் நகரில் நேற்று (6-08-86) தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவு செய்து மேற்குறித்த விலாசத்துடன் நேரிலோ அல்லதுகடித மூலமோ தொடர்பு கொள்ளவும். (C 3926)


லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாண்டியன்—ரேவதி
நடித்த
புதுமைப் பெண்
[புதிய பிரதி கலர்]

வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனு
வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

## கடற்படை சட்டமும் சபையில் நிறைவேறியது

கொழும்பு, புதன் கடற்படை திருத்தச்சட்டம் மூலம் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த திருத்த சட்ட மூலத்தின் நோக்கம் பற்றி இளைஞர் விவகார கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில்: கடற்படை உத்தியோகத்தர்களைப் பாதிக்கும் பல ஒழுங்கீனங்களை நீக்கும் முகமாக இந்த சட்ட மூலம் கொண்டு வரப்பட்டது என்றார்.

விமானப்படைச் சட்டத்தின் கீழ் அமைச்சர் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்த விதிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சீனன் குடாப் பகுதிக்கும் திருகோணமலைத்துறைமுகத்திற்கும் சேதம் எதுவும் ஏற்படாமல் பராமரிப்பதற்கு இந்த விதிகள் ஏதுவாக இருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

அத்தனகலக் தொகுதி உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் 'கொட்டியா' உட்பட திருகோணமலைப் பகுதியின் நிர்வாகம் முழுவதும் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்று கூறினர். (ஒ)

## திருமலையில் 15 அடி ரயில்பாதை தகர்ப்பு சரக்கு வண்டி சேதம்

கொழும்பு. செவ். திருமலை மாவட்டத்திலுள்ள பிறிமா மா ஆலைக்கு சரக்கேற்றிச் சென்ற ரயிலொன்று ரயில் பாதையில் வைக்கப்பட்டிருந்த குண்டினல் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது இச்சம்பவத்தில் ரயிலில் சென்ற இருவர் காயமுற்றனர்.

கொழும்பு - திருமலை ரயில் பாதையில் தம்பலகாமத்துக்கும் சீனன்குடாவுக்கும் இடையில் குரங்குப்பாலத்தில் இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது சுமார் 15 அடி நீளமான ரயில் பாதை தகர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துக்கு தமிழ்த் தீவிரவ திகளேபொப்றுபு என அரசாங்கம் அறிவித்துள்ளது (வா- ஊ)

### திருவிழாவில் சித்து

யாழ்ப்பாணம், வியாழன் ஆவரங்கால் பரிமாறி அம்மன் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை பிற்பகல் வண்ணை ஸ்ரீசிவபாலசிங்கம் சித்தர் தலையில் தேங்காய் உடைத்துச் சித்துக்கள் புரிவார். (ச)

### சைவப்பெரியார் குருபூசை

யாழ்ப்பாணம், வியாழன் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் குருபூசை இம்மாதம் பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கல்லூரி அதிபர் க அருணசலம் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் சைவப் பெரியாரின் வாழ்க்கை வரலாறும் தொண்டுகளும் பற்றிய சிறப்புரைகள் இடம்பெறும்.

விழாவினைத் தொடர்ந்து அமரர் எஸ். சிதம்பரப்பிள்ளை B A, B.Sc, அவர்களுக்கான இரங்கலுரையும் இடம் பெறும்.

### உற்சவம்

சுண்டுக்குளி, செவ்வாய். ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இம் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும், 19ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★

புலோலி, புதன் புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான அம்பாள் உற்சவம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரதோற்சவம் இன்று காலையும், ஆடிப்பூர உற்சவமும், தீர்தோற்சவமும் மறுநாள் காலையில் நடைபெறவுள்ளது.

### கட்டிவிட்டோம் பேராலயம்

அன்றுஅரி யாலைஇலந் தைக்குளம் வீதியில்
நன்றுநல்கும் நாச்சிமாராய் வீற்றிருந்த - தேவியே!
இன்றுஇவ்வூ ரார்கட்டி விட்டோம்பே ராலயம்
என்பூம கிழ்வதைப் பார்!

பேரின்பத் தாலுன்னை வீரமகா மாரியென்று
தேரின்மேல் ஏற்றியரி வாகனத்தில் - வாளுடன்
பாரின் அரசியாக வீற்றிருக்க வைத்தது
ஊரின்நன் மைக்காகத் தான்!

— சுண்டிக்குளிக் கவிஞர் க. யோகராஜா

★

### அம்பிகையின் அருள்பெறுவோம்

நாயன்மார் கட்டு எனும்
நல்லதிருப் பதி தனிலே
நாயகியாம் பேய்ச்சி யவள்
நம்மையெலாங் காத்திடவே
தாயவளைத் தேர் தனிலே
தோன்றுகின்ற அழகுமிகு
தூயதிருக் காட்சிதனைக்
கண்டு அருள் பெற்றிடுவோம்.

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

★ அரியாலை பிரப்பம் குளம் மகாமாரி அம்பாள், நாயன்மார்கட்டு பேய்ச்சி அம்பாள் ரதோற்சவம் இன்று.

## வடக்கு, கிழக்கு இணைப்பு: 80-ம் ஆண்டு எடுத்த முடிவை கம்யூனிஸ்ட் கட்சி மாற்றுது

யாழ்ப்பாணம், வியா. அரசின் பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடிவரும் போராளிகளை மாக்ஸிஸ பயங்கரவாதிகளென அரசு வர்ணித்து மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட்டுகளுக்கெதிரான ஒரு பகைமை உணர்ச்சியைத் தூண்டிவிட பேரினவாத அரசு முயற்சிக்கின்றது. மறுபுறத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் பேசும் மக்களின் இன்றைய போராட்டத்திற்கு பாட்டாளி வர்க்கத்தின் வழிகாட்டலில் வெகுஜன வடிவங் கொடுத்து அதனை ஒரு முனைப்பான போராட்டமாக வளர்த்தெடுக்க கம்யூனிஸ்ட்டுகள் எடுத்து வரும் முயற்சிகளையெல்லாம் மழுங்கடிக்கும் நோக்குடன் கம்யூனிஸ்ட்கட்சி வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைவதற்கு மாறாக உள்ளது என சிலகம்யூனிஸ்ட் கட்சி விரோதிகள் அபாண்டம் கக்கிக் கொண்டிருக்கின்றனர் இது உண்மைக்கு மாறான பிரச்சாரமாகும்"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. பொன் குமாரசமி கூறினர்

முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான திரு. ஐ ஆர் அரியரத்தினத்தின் 70வது ஆண்டு நிறைவு விழா பொதுக் கூட்டம் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது. அக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்

அவர் தொடர்ந்து பேசியதாவது "இந்த இணைப்புப் பற்றி யாருமே சிந்திக்காது விஸ்வரூபம் எடுக்காத கட்டத்தில் 1980 ஜுலை மாதம் நடைபெற்ற இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் 11 வது தேசிய மகாநாட்டிலேயே இணைப்பு சம்பந்தமான தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டு விட்டது

இலங்கையின் வடக்குகிழக்கு பகுதி மக்களின் விருப்பத்திற்கிசைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுயாட்சிப்பிராந்தியங்களை அமைப்பதற்கும் அத்தகைய பிராந்தியங்கள் விரும்பினல் ஒன்றிணைப்பதற்கான உரிமையுமான பிரதேச சுயாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதும் பிரயோகம் செய்யும் உரிமையும் உண்டு. இந் நிலையிலிருந்து கட்சி என்றும் மாறியதும் கிடையாது. மாறவும் முடியாது. எனவே இத்தீ வை இடைக்காலத் தீர்வாகவே கட்சி கணித்துள்ளது. தேசிய இனப் பிரசனையின் தீர்விற்கு இன்றைய முதலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் நிரந்தரமானதும் தீர்க்கமான முடிவும் கண்டுவிட முடியாது. ஒரு சோசலிச ஆட்சி அமைப்பில் மாத்திரம் ஒரு பூரண தீர்வு காண முடியும் எனகட்சி நம்புகின்றது எனவே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படும் உடன்பாட்டிற்கு கட்சி குந்தகமாகச் செயல்பட மாட்டாது அதனை ஆதரிக்கும்.

முன்னைநாள் அதிபர் திரு. எஸ் சிவபாதசுந்தரம், திரு அ. வயித்திலிங்கம், திரு, எம் சுப்பிரமணியம், கலாநிதி சோ. கிருஷ்ணராசா, டொமினிக் ஜீவா, திரு. எஸ் விஜயானந்தன் உட்படப் பலர் திரு ஐ ஆர் அரியரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர்கள். (இ)

### சமய பாட பரீட்சைகள்

வட்டுக்கோட்டை, புதன் வட்டு. இந்து இளைஞர் கலாச்சார மன்றத்தின் ஆதரவில் இயங்கும் பரமானந்தசிவம் ஞாபகார்த்த நூல் நிலையம் சமயபாடப் பரீட்சைகளை நடாத்தவுள்ளது.

இப் பரீட்சைகள் எதிர்வரும் 9ம், 10ம் திகதிகளில் காலை வட்டு திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சையில் சித்தியடைந் தாருக்கான பரிசில்கள் இம் மாதம் 19ம் திகதி நடைபெறும் நூல் நிலைய ஆண்டு விழாவின் போது வழங்கப்படும். இப் பரீட்சைகளை இந் நிலையம் வருடா வருடம் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

### சட்டவிரோத சாராயத்..-

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மலிந்துவருகின்றன.

"இந்த வகையில் காடைத்தனத்திற்கும் சமூகவிரோத செயற்பாடுகளுக்கும் வழிவகுக்கும் வகையில் சனநெருக்கடியுள்ள இடங்களில் சந்திக்குச் சந்தி சட்டவிரோத சாராயத் தவறணைகள் திறக்கப்படுகின்றன. இச்சட்டவிரோத சாராயத் தவறணைகளில் போதைவஸ்து விற்பனையும், விபச்சாரமும், தவறணைகளுடன் கூடிய மினிசினிமாக்களில் ஆபாசப்படங்களும் காண்பிக்கப்படுவதுடன் மேலும் பல சமூகவிரோதச் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. மேலும் மக்கள் செறிந்து வாழும் இடங்களிலும் சந்திகளிலும் அதிகமதுபோதையுடன் இரவுவேளைகளில் நின்று வீடுவீடாக காடைத்தனம் புரிவதையும் அவதானிக்கமுடிகிறது.

"இத்துடன் கூட்டமாகக் கூடி சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் ஓர் புதிய சமூகவிரோதக் கும்பல் இச்சட்டவிரோத சாராயத் தவறணைகள் மூலம் உருவாகின்றது. இக் கும்பல் வீதிகளில் அசிங்கமாகவும் அநாகரிகமாகவும் நடப்பதைக்காணலாம்.

"இராணுவ அடக்குமுறை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்ட இந்நிலையில் இப்புதிய சமுதாயவிரோதக் காரணியிலிருந்து எம்மக்களைக் காக்கும், விடுவிக்கும் சமூகப் பொறுப்பு விடுதலையை முன்னெடுக்கும் அனைத்துசக்திகளுக்குமுள்ளது.

'இத்துடன் தமிழீழத்திற்கான சுயராஜ்யம் உருவாக்கப்படும் இன்றைய சூழ்நிலையில் தமிழீழ அரசநிர்வாகம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

"இவைகளின் ஓர் அரங்கமாகவே அனுமதிப்பத்திரமின்றி இயங்கும் சட்டவிரோத சாராயத்தவறணைகள் முழுவதும் முற்றாக எம்மால் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் அனுமதிப்பத்திரம் பெற்றசாராயத் தவறணைகளும் எம்மால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரமளிக்கப்பட்டபின்பே இயங்க அனுமதிக்கப்படும். எனவே அனைத்து சாராயத் தவறணை உரிமையாளர்களும் எமமுடன் தொடர்புகொண்டு செயற்படுமாறுவேண்டப்படுகிறீர்கள்". (ம)

### விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு புதன் கொழும்பு கொம்பனித் தெருவில் கடந்தஜூன் மாதம் நடைபெற்ற 7 பேரின் கொலை கொடர்பா னவழக்கு விசாரணை இம்மாதம் 18ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## திருமலை மாவட்டத்தில்— சட்டவிரோத செயல்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள்

மூதூர், புதன் ஹிரோயின் போதைவஸ்தை வைத்திருந்தது அதனைப் புகைத்தது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை ஜமாலியா வீதியைச்சேர்ந்த முகமது ஹனிபா நஜீப் என்பவர் கைது செய்யப்பட்டு திருமலை பதில் நீதவான் திரு. எம். கே செல்வராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

ஹிரோயின் புகைத்ததற்கு 1500 ரூபாவும் 35 கிரெயின்ஸ் ஹிரெயின் வைத்திருந்தகற்காக 1000 ரூபாவும் மொத்தம் 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

கசிப்பு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பலருக்கு திருமலை நீதவான் திரு சுனில் ராஜபக்ஸ கடும் அபராதம் விதித்தார்.

சந்தளாயைச் சேர்ந்த டபிள்யு. எம். சந்திரசிறி என்பவருக்கு கசிப்பு வடிக்கும் உபகரணம் வைத்திருந்தது, கசிப்பு வைத்திருந்தது, கோடா வைத்திருந்தது ஆகிய மூன்று குற்றங்களுக்குமாக மொத்தம் 6000 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த ஜி எம். நிமால் என்பவருக்கும் இதே குற்றச்சாட்டுகளுக்கு 6000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

எல் ஆர். கிரிபண்டா என்பவருக்கும் இதே குற்றங்களுக்காக 6000 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

ஹிரொயின் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட திருமலைநகரைச் சேர்ந்த என் தேவதாசன் என்பவருக்கு 1000 ரூபாவும், பி விஜயன் என்பவருக்கு 1150 ரூபாவும் அபராதமாக விதிககப்பட்டது

கசிப்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டபபட்ட சோனகவாடியைச் சேர்ந்த பிச்சை உம்மா என்னும் பெண்ணிற்கும், கஞ்சா வைத்திருந்தாகக் குற்றம சாட்டப்பட்ட எஸ். திருஞானசம்பந்தன் என்பவருக்கும் 3000 ரூபா வீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. [எ,

### 6 வாகனம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லகத்தினுள்ளிருந்த 6 'ஷொட்கன்', கள ஒரு வங்கி-ரோக்கி மற்றும் அதிசக்தியுடைய வி. எச். எவ். தொடர்புச் சாதனம் ஆகியவற்றையும் தம்முடன் கொண்டுசென்றனர் இவர்கள் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக 'மட்கோவ்' பிரிவு அலுவலகத்தினுள் தரித்து நின்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் எரிக்கப்பட்ட, எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 68 லட்ச ரூபாய் என திருமலை துறைமுக அதிகார சபை மதிப்பிட்டுள்ளது.

ஈ பி. ஆர். எல். எவ். உரிமை கோருகிறது

இதேவேளை இதனைத் தாங்களே செய்ததாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் உரிமை கோரியிருப்பதாகப் பிடிக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. [ஊ]

தென்னுபிரிக்காமீது பொருளாதாரத்தடை விதிக்காமை:

# பிரிட்டன் மீது பரவலாக உலகநாடுகள் கண்டனம்!

லண்டன், ஆகஸ் 6

**தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத்தடை விதிக்க முன் வராததையிட்டு பிரிட்டன் மீது பரவலானவகையில் கண்டனங்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. இந்தியா ஸிம்பாப்வே, ஸாம்பியா, நைஜீரியா தலைவர்கள உட்பட பல உலகத்தலைவர் பிரிட்டனை வெகுவாக கண்டித்துள்ளனர்.**

பொதுநலவாய அமைப்பின் சில நாடுகள் தென்னுபிரிக்க நிலைரம் குறித்து பிரிட்டனில் கடந்த சில தினங்களாக மகாநாடொன்றை நடத்தின. இம் மகாநாட்டின் இறுதியில் பிரதமர் ராஜீவ் காந்தி, ஸாம்பியத் தலைவர் கெனத் கவுண்டர், ஸிம்பாப்வே தலைவர் திரு ரொபர்ட்முகாவே ஆகியோர் தென்னுபிரிக்கா மீதான நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்டனர்.

உலகச் செய்திகள்

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறியதாவது: "தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடைவிதிக்க பிரிட்டன் தவறியுள்ளதால் பொதுநலவாய அமைப்பின் தலைமையை அது தொடர்ந்து வகிக்கும் தகுதியை இழந்துள்ளது" என்றார்.

ஸாம்பிய அதிபர் கெனத் கவுண்டா கருத்து வெளியிட்டதாவது: "தகுந்த நேரத்தில் தென்னுபிரிக்க கறுப்பின மக்களுக்கு உதவ பிரிட்டன் தவறியுள்ளது"

ஸிம்பாப்வே தலைவர் முகாபே கூறியதாவது: "பிரிட்டன் தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவர மறுத்துள்ளதையடுத்து தென்னுபிரிக்க கறுப்பினத்தவர்களை அது மிகவும் புறக்கணித்துள்ளது" என்றார்.

இதேவேளை நைஜீரியா, தென்னுபிரிக்கா மீது விரிவான பொருளாதாரத் தடைகளை கொண்டுவரும்படி ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளிடம் கேட்டுள்ளது. இந்நடவடிக்கைக்காக பிரிட்டனை எதிர்பார்த்திருக்க வேண்டாமெனவும் அது குறிப்பிட்டுள்ளது.

மூன்ருவது தடவையாக

## பிரேம் பிம்சுலானந்தா தாய்லாந்து பிரதமர்!

பாங்கொங், ஆகஸ் 6, தாய்லாந்தின் புதிய பிரதம மந்திரியாக ஜெனரல் பிரேம் பிம்சுலானந்தா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற தாய்லாந்து பொதுத்தேர் தலையடுத்து இவர் பிரதமரானார் நான்கு கட்சிகளைக் கொண்ட கூட்டணி அமைப்பு இவரை தமது தலைவராகத் தெரிவு செய்ததையடுத்து தாய்லாந்து மன்னர் பூமியில் பிரேம்பிம்சுலானந்தாவை தாய்லாந்து பிரதமராக நியமித்தார்.

தற்போது இடம் பெற்ற தாய்லாந்து தேர்தலில் ஜெனரல் பிம்சுலானந்தா போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் நாட்டின் செல்வாக்கு மிக்க தலைவர் என்ற காரணத்தினுல் நான்கு கட்சிகளைக் கொண்ட கூட்டணி இவரை ஏகமனதாக தமது பிரதமராக்கியது. மூன்ருவது தடவையாக திரு பிம்சுலானந்தா பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

பிலிப்பைன்ஸில்

## அரசு, கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளருடன் பேச்சு!

மணிலா, ஆக 6,

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுடன், சமரசப் பேச்சுக்களை பிலிப்பைன்ஸ் அரசு ஆரம்பித்துள்ளது.

கடந்த 17 வருடங்களாக இடம் பெற்று வரும் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரும் விதத்திலேயே இப்பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

பிலிப்பைன்ஸ் அரசுசார்பில் அதன் பிரதிநிதியாக விவசாய அமைச்சர் ரமோன் பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திருமதி. அக்கினேவினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸில் உள்ள கத்தோலிக்க ஸ்தபானங்கள் மற்றும், சில அரசியல் ஸ்தாபனங்கள் இந்த சமரச நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமென விருப்பந் தெரிவித்துள்ளன.

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும், உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் சென்ற வாரம் நடைபெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**சென். மேரிஸ் வெற்றி**

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், சென். மேரிஸ் கழகம் 4—3 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எம், தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

**யாழ். முஸ்லிம் வெற்றி**

யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்கும், கிறீன்

(7-ம் பக்கம் பார்க்க)


# சேவை

திருமண சேவையின் இன்றைய முன்னேடிகளான 'சமுத்திரா மல்ரி சேவிஸ்' ஸ்தாபனத்தார் தமது பன்முகப்படுத்தப்பட்ட கிளை நிறுவனங்கள் மூலமும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமும் பல புதிய

* B. A. * B. Sc. * T. A. * டாக்டர்கள் * எஞ்ஜினியர்கள் * வங்கி ஊழியர்கள் * வர்த்தகர்கள் * விவசாயிகள் * தனியார் ஸ்தாபன ஊழியர்கள் ஆகிய சகல தரத்திலும் மணமக்கள் பதிவாகி இருக்கிருர்கள், உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

## இதர சேவைகள்

காணி வீடு வாங்க விற்க விரும்புவோர், கடவுச்சீட்டுக்கள் எடுக்க விரும்புவோர், கட்டிட ஒப்பந்தங்கள், மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் வாங்க விற்க விரும்புவோர் நேரடியாகவோ, கடிதமூலமோ தொடர்புகொள்ளவும்.

## எமது தேவை:

(1) வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் எமது வேலணைக் கிளை நிறுவனத்திற்கு முகாமையாளர், வெளிக்கள உத்தியோகத்தர், லிகிதர்கள் உடனடியாகத் தேவை. அத்துடன் எமது கிளை நிறுவனங்களிலும் லிகிதர்களுக்கான சில பதவி வெற்றிடங்களும் உண்டு.

தலைமைச் செயலகத்தில் 10-08-86-க்கிடையில் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

(2) கிராமங்கள் தோறும் முகவர்கள் தேவை.

நேரடியாகத் தலைமைச் செயலகத்தில் தொடர்புகொள்ளவும்.

(10-08-86 முடிவு திகதி.)

எமது பன்முகப்படுத்தப்பட்ட கிளை நிறுவனங்கள்:

(I) முருகமூர்த்தி லேன், நெல்லியடி. கரவெட்டி.

(II) K. K. S. வீதி, தெல்லிப்பளை.

(III) காரைநகர் வீதி, சங்கானை.

(விரைவில் மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.)

## வெகுவிரைவில்

(IV) வங்களாவடி, வேலணை.

(V) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(VI) கண்டி வீதி, சாவகச்சேரி.

தலைமைச் செயலகம்;

# சமுத்திரா மல்ரி சேவிசஸ்,

303, பலாலி றேட், கோண்டாவில்.

"உங்கள் தேவை எங்கள் சேவை"

(A 1031)


ஆங்கிலதினப் போட்டியில்

## பாஷையூர் அந்தோனியார் வித்தியாலய சாதனைகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் வட்டார ரீதியில் அண்மையில் நடாத்தப்பட்ட ஆங்கிலத்தினப் போட்டியில், பாஷையூர் புனித அந்தோனியார் றே. க வித்தியாலய மாணவிகள் பெரும் சாதனையை புரிந்துள்ளார்கள்.

இப்போட்டியில், மேற்படி வித்தியாலய மாணவிகள் பெற்ற இடங்களின் விபரம் வருமாறு:

நாடகம்:- சிரேஷ்ட பிரிவு 1-ம் இடம், மத்திய பிரிவு 1-ம் இடம், பாலர் பிரிவு 1-ம் இடம்.

சம்பாஷனை: ஆண்டு 6 1-ம் இடம், ஆண்டு 5 2-ம் இடம், ஆண்டு 4 1-ம் இடம்.

பேச்சு: ஆண்டு 11 அ. மாறி ஐருங்னி 1-ம் இடம், ஆண்டு 11 எ. கிளாறிஸ் பியந்தி 2-ம் இடம்.

கட்டுரை: ஆண்டு 11 தொ. நளினி 1-ம் இடம், ஆண்டு 11 ப. கிருஷ்ணபவானி 1-ம் இடம், ஆண்டு 8 பே சுஜித்தா 1-ம் இடம், அ சுகுனலதா 2-ம் இடம், ஆண்டு 7 பி. அசெம்ரா சாமினி 1-ம் இடம்.

கூட்டுக்கவி: ஆண்டு 7 1-ம் இடம். அபிநயக்கவி: ஆண்டு 5 2-ம் இடம்.

கவிதை: ஆண்டு 11 பெ. றொசித்தா 2-ம் இடம், கோ. குமுதா 3-ம் இடம், ஆண்டு 10 யே எழிலரசி 3-ம் இடம், ஆண்டு 9 செ ஸ்ரார்லின் 1-ம் இடம், தொ. வதீசலா

(7ம் பக்கம் பார்க்க)

## "மாணவர்களின் கல்விக்கு பெற்ரேரும் சூழலும் முக்கியம்"

யாழ்ப்பாணம், வியாழன்

"மாணவர்களின் கல்வி அறிவு குன்றுவதற்கு பெற்ரேரும், சூழலுமே முக்கிய காரணமாக இருக்கிறது. பெற்ருேரும், நலன் விரும்பிகளும், மாணவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கினுல்தான் ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே செய்ய முடியும்."

இவ்வாறு தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகா வித்தியாலய அதிபர் திரு க. இராசதுரை பேசுகையில் வலியுறுத்திக் கூறினுர்

மேற்படி மகா வித்தியாலய அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் திரு. இராசதுரை மேலும் பேசுகையில், மாணவர்களில் பலர் கல்வி பயில்வதற்கு ஆர்வலராக இருக்கிருர்கள் என்றும் ஆனுல் சில பெற்ரேர் தங்கள் பிள்ளைகளை தொடர்ந்து சிறப்பாகப் பயில்வதற்குத் தடையாக தாம் கண்டிருப்பதாகவும் கூறினுர்.

இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவரும், யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் முன்னுள் தலைவருமான திரு. ஆ. ந. இராசேந்திரனும் உரை நிகழ்த்தினுர்.

பாடசாலை அபிவிருத்தி சபையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு க. இராசதுரை (அதிபர்), செயலாளர் திரு. ஆ ந. இராசேந்திரன், உப செயலாளர் திரு. க. வேலாயுதபிள்ளை, பொருளாளர் திரு. என். நாகரத்தினம் (ஆசிரியை), மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (மா)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கதிற்றல் வீதி 23ம் இலக்கத்தில் வசித்த ஏபிரகாம் சந்தியாப்பிள்ளை அருளானந்தம் என்பவரின் மரணசாதனமின்றி மரணித்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

மரணித்தவர்.

வழ. இல. தத்துவம்/3975
ஆபிரகாம் சந்தியாப்பிள்ளை அருளானந்தம்
இல 23, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதிற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம்ஆண்டு ஆவணி மாதம் 8ம் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப் படலாக தென் பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆடிமாதம் 29 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைந்தது.
வ. மயில்வாகனம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 3892

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்வன் நாகமணி நவநாயகம் [பாபு]

உதயம்:- 08 - 5 - 1966
அஸ்த்தமனம்:- 17-8-1985
திதி:- 07 - 8 - 1986

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய் பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் பார்வையில் பசுமரமாய், சிரிப்பில் நிறைமதியாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து அணைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வமே தாங்கள் மறைந்து ஓராண்டு ஒழிந்தும் தங்கள் திருவுருவமும் நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு ஐயா, அம்மா
சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார்,
மக்கள்மார்,
மருமக்கள்மார்.
70/11 இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம். [C 3919]

## மெய்வல்லுநர் போட்டி
# அகில இலங்கை ரீதியில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள்

யாழ்ப்பாணம், வியாழன் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான நடப்பு வருட மெய்வல்லுநர்போட்டியில் பங்கு பற்றுவதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள கீழ்க் காணும் பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர்.

### 17 வயதுப்பிரிவு ஆண்கள்:

எஸ். கஜேந்திரநாதன் [யாழ்.மத்தியகல்லூரி] 100 மீற்றற். சோ சுரேஸ் [யாழ். இந்துக்கல்லூரி] 20 மீற்றர் முப்பாய்ச்சல். எம். கணேசராசா [யாழ். இந்துக்கல் லூரி] உயரம்பாய்தல், தட்டெறிதல், ஈட்டிஎறிதல். ரி. இராமச்சந்திரா [ஸ்கந்தா] 400 மீற்றர், ஈட்டி எறிதல் எஸ். ரவிக்குமார் [ஸ்கந்தா] குண்டெறிதல், தட்டெறிதல். எஸ். சேவியர் [சனகரத்தினம் ம.ம.வி] 800 மீற்றர். 1500 மீற்றர் கே. விஸ்வநாத் [கொக்குவில் இந்து] உயரம்பாய்தல், தடியூன்றிப்பாய்தல். கே. தனராஜ் [உடுப்பிட்டி அ.மி.] உயரம்பாய்தல், நீளம்பாய்தல் யாழ் இந்துக்கல்லூரி - 4/100 மீற்றர் அஞ்சல், 4/200 மீற்றர் அஞ்சல் ஒஸ்மானியக் கல்லூரி - 4/400 மீற்றர் அஞ்சல்.

### 19 வயதுப்பிரிவு ஆண்கள்:

ஏ. பாஸ்கர் [சனகரத்தினம் ம.ம.வி] 100 மீற்றர், 200மீற்றர். வி தயாபரசிங்கம் [சனகரத்தினம் ம ம வி] 1500மீற்றர். கே இராமேஸ்வரன் [யாழ் இந்துக்கல்லூரி] 400 மீற்றர் நீளம்பாய்தல். பி ராஜீஸ்வரன் [யாழ் இந்துக் கல் லூரி] 100 மீற்றர். தடை தாண்டல். ரி. இரவீந்திரன் [யாழ் மத்தியகல்லூரி] 800 மீற்றர். ஏ. ரி ஜெயசிங்கம் [இளவாலை புனித கென்றியதசர்] 3000 மீற்றர். யி. பரபானந்தன் [யாழ் இந்துக்கல்லூரி] உயரம்பாய்தல். முப்பாய்ச்சல், தடியூன்றிப்பாய்தல். எஸ். ரவீந்திரகுமார் [ஸ்கந்தா] குண்டெறிதல், தட்டெறிதல் ஏ சுரேஸ்நாதன் (ஸ்கந்தா) ஈட்டியெறிதல். ரி. ஜெகதீஸ்வரன் [கொக்குவில் இந்து] உயரம்பாய்தல். யாழ் இந்துக்கல்லூரி 4/100 மீற்றர், 4/200 மீற்றர் அஞ்சல் புனிதபொன்றியரசர் கல்லூரி] 4/400 மீற்றர் அஞ்சல்.

### 17 வயதுப் பிரிவு பெண்கள்:

ரி மாயரதி [சுண்டிக்குளிமகளிர் கல்லூரி] 100 மீற்றர். ரி பிரதீபா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] குண்டெறிதல், தட்டெறிதல். ஈட்டிஎறிதல், ஜீவனுஷாயா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] நீளம்பாய்தல். ஆர், றேமளா (உடுவில் மகளிர் கல்லூரி] 200 மீற்றர், 400 மீற்றர் ரி சுமதி [சாவகச்சேரி மகளிர் கல்லூரி] உயரப்பாய்தல். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 4/100 மீற்றர், 4/200 மீற்றர் அஞ்சல்

### 19 வயதுப் பிரிவு பெண்கள்:

ஏ விஜேதினி (உடுவில் மகளிர் கல்லூரி) 100 மீற்றர் உயரம்பாய்தல், செ. விஜிதா (உடுவில் மகளிர்கல்லூரி) 100 மீற்றர் தடைதாண்டல் பி டெய்சி (உடுவில் மகளிர்கல்லூரி) நீளம்பாய்தல். எஸ் மாயராணி (வேம்படிமகளிர் கல்லூரி) 200 மீற்றர், நீளம்பாய்தல். எம். நிர்மலாதேவி (அராலி சரஸ்வதி வித்தி 800 மீற்றர். ரி. ஜெசிந்தராணி (மயிலணி ம.வி.) 1500 மீற்றர். எஸ் கலைச்செல்வி (வட.இந்து) குண்டெறிதல் கே மாலினி (இளவாலை கன்னியர்மடம்) தட்டிஎறிதல் எஸ். புனிதவதி (மந்துவில் அ த. க. பாடசாலை) தட்டெறிதல் உடுவில்மகளிர் கல்லூரி 4/100 மீற்றர் அஞ்சல், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 4/200 மீற்றர் அஞ்சல்.

(ச-இ)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சோமலிங்கம் தவமணி
அவர்கள்

தோற்றம்: 1930-06-08
மறைவு: 1983-08-06
திதி: 1986-08-07

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த எங்கள் அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
'மணி இல்லம்',
2 5, ஆடியபாதம் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[C-3921]

## உதைபந்தாட்ட

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பீல்ட் (வெள்ளை) கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ் முஸ்லிம் கழகம் 3—1 கோல்களால் வெற்றி பெற்றது

இப்போட்டிக்கு திரு. ராமநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

### சென். நீக்கிலஸ் வெற்றி

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துக்கும். குருநகர் புனிதவளன் விளையாட்டுக் கழகத்துக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில், சென். நீக்கிலஸ் கழகம் 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு எஸ் எம் மாட்டின் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

## பாஷையூர் ---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

2-ம் இடம், ஆண்டு 8 பே சுஜித்தா 3-ம் இடம், ஆண்டு 7 அ. லில்லியமலெக்கி 3-ம் இடம், ஆண்டு 6 அ அமோறின் 3-ம் இடம், ஆண்டு 5 ச. சத்தியவேணி 2-ம் இடம்

சொல்வதெழுதல்: ஆண்டு 11 எ. கிளாறிஸ்பியந்தி 1-ம் இடம், தொ. நளினி 2-ம் இடம், ஆண்டு 10 ம றெஜினகிளாறின் 3-ம் இடம், ஆண்டு 6 எ. மைகளின் சியாந்தி 2-ம் இடம், ஆண்டு 5 யோ. சுபோதினி 3-ம் இடம்.

வாசிப்பு: ஆண்டு 9 செ இமாக்குலெற் 3-ம் இடம், ஆண்டு 8 யோ. எலின் 2-ம் இடம், ஆண்டு 7 வை றூஜினி 2-ம் இடம், ஆண்டு 6 மத யூட்லின் 2-ம் இடம் எ மைக்ளின் சியாந்தி 3-ம் இடம் ஆண்டு 5 யோ. சுபோதினி 3-ம் இடம், ஆண்டு 4 ம. ஸ்ரீ ராஜகுமாரி 1-ம இடம், எ. ஜெனிற்ரா 2-ம் இடம்.

எழுத்து: ஆண்டு 5 ச. சத்தியவேணி 1-ம் இடம். செ ரூபமலர் 1-ம் இடம், ஆண்டு 6 ம. சைஞஅனற் 1-ம் இடம்

(வி-இ)

## சொற்பொழிவு

வடடுக்கோட்டை, புதன் நல்லை ஆதீனத்தில் நல்லூர் உற்சவ காலத்தில் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன

மேற்படிசொற்பொழிவுகளை இருபத்தைந்து தலைப்புகளில் ஆத்மஜோதி திரு நா. முத்தையா நிகழ்த்தவுள்ளார்.

(இ)

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 22 [1986-8-7]
கிழமை- வியாழன்
திதி- துதியை
பி. இ. வரை
நக்ஷத்திரம்- மகம்
மு. இ. வரை

மேடம்- குருவின் ஆசியுடன் குறிக்கோள் வெற்றி காண்பதற்கு இடமுண்டு இரக்க சிந்தை மேலிடும். நேர்முகப் பரீட்சைக்கும் ஏற்றதினம்.

இடபம்- இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் உண்டு.

மிதுனம்- உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள்.

கடகம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் மேற்படும். ஆசரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிப்பர்.

சிங்கம்- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்தின் செல்வாக்குப் பாதிக்கப்படும் நண்பர்கள்மூலமும் நஷ்டமடைய நேரும்

கன்னி- குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்.

துலாம்- சிந்தனைகள் அலைமோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசர முடிவின்மூலம் குறை கேட்க நேரிடும்.

விருச்சிகம்- கருத்துவேற்றுமைகள் மறைவதற்கு இடமுண்டு. தங்கள் திறமைக்கு மற்றவர்கள் சிரமதழ்த்துவார்கள். விரும்பிய பொருளும் கிடைக்கலாம்.

தனுசு- இனத்தவரின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பயணம் குறித்து திட்டமிடப்படலாம். சுபதினம்.

மகரம்- கருத்தினில் மோசம் வாட்டிடும் பிணியும் மிகையான போக்கினலை மனமும் பாழாய்ப் போகும்.

கும்பம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் ஏற்பட முடியும் குடும்ப விவகாரங்களிலும் பிணைப்புகள் இறுகும்

மீனம்- குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியமொன்றும் அம்பலத்துக்கு வரலாம். ஓன்று அட்டாவதானம் வேண்டும்.

திருமலை
வே ரவீந்திரன்


## பிந்திய விளம்பரங்கள்

பிந்திய விளம்பரங்களாக மரண அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள் என்பன நாலாம் பக்கத்தில் வெளிவரும்.

கல்யாண விளம்பரங்கள், நினைவஞ்சலிகள் அடுத்த நாள் வெளிவர வேண்டுமாயின் முதல்நாள் பிற்பகல் 2-30 மணிக்கு முன்பு கொடுக்கப்பட வேண்டும்.

நிர்வாகி,
'ஈழநாடு' லிமிட்டெட்.
[A 1109]



## விக்ஞ டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்பெற்ற ஒரே நிறுவனம்)

A/L

87 — 4-வது பிரிவு
ஆரம்பம் 09-08-86 காலை 8மணி

88 — 3-வது பிரிவு
ஆரம்பம் 09-08-86 காலை 11மணி

மு. குறிப்பு:
(1) கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்தவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினல் போதிக்கப்படுகின்றன.
(2) யாழ். நகரில் கலை, வர்த்தக வகுப்புக்களுச்கு இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றது.
(3) அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவேண்டும் [A-1026]



## எமது புதிய வெளியீடுகள்

1. தாய்க்கு ஒரு தாலாட்டு (Pyramid Master)
2. கரையைத் தொடாத அலைகள் (Pyramid Master)
3. நானும் ஒரு தொழிலாளி (Pyramid Master)
4. முதல் வசந்தம் (Pyramid Master)
5. புதிர் (Pyramid Master)
6. தர்மம் (Pyramid Master)
7. ரேவதி (Pyramid Master)
8 கண்ணே கனியமுதே (Pyramid Master)
9. அலிபாபாவும் 40 திருடர்களும் (Pyramid Master)
10. ராணி லலிதாங்கி (Pyramid Master)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
C 3922 தொலைபேசி: 23665

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 7-8-86

## இரத்ததானம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் வியாழன்

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை போக்குமுகமாக அரியாலை சனசமூகநிலையத்தில் 9ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இரத்ததானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 'இன்ரரக்ட்' கழகத்தினர் இவ்விரத்ததான ஏற்பாட்டைச் செய்துள்ளனர். (வா)

## நயினை கொடியேற்றம்: படையினர் 'வீடியோ' பிடித்தனர்

நயினாதீவு, புதன்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான வருடாந்த திருவிழா நேற்று 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அராலித் துறையூடாகத் தீவுப் பகுதிக்களுக்கான போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன கொடியேற்றத் தினத்தன்று ஆயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர். புதிதாகச் செய்யப்பட்ட சகடையில் அம்பாள் விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் திருவீதியுலாவும் நடைபெற்றது.

எதிர்வரும் 17ம் திகதி சப்பரத் திருவிழாவும், 18ம் திகதி ரதோற்சவமும், 19ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. வழமைபோலவே தெற்போற்சவத் திருவிழாவுக்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

குறிகாட்டுவானிலிருந்து நயினைதீவுக்குச் செல்வதற்காக மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 'லோஞ்' சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கொடியேற்றத் திருவிழாவை அரச படையினர் 'வீடியோ' படமும் எடுத்தனர். இராணுவ உயரதிகாரி மேஜர் ராஜபக்ஸ ஆலயத்திற்கு விஜயம் செய்து அறங்காவலர்சபை உறுப்பினர்களுடன் உரையாடினர் திருவிழாக் காலங்களில் படையினர் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டுமென மேலிடம் பணித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆலய அறங்காவலர் சபையின் தலைவரும், யாழ். செயலக பொதுசனத் தொடர்பதிகாரியுமான திரு த. குலசேகரம் உற்சவ கிரியைகளையும் மற்றும் ஒழுங்குகளையும் நேரில் நின்று கவனித்தார்.

அம்பாள் அடியார்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இவ்வருட உற்சவம் தங்குதடையின்றி இனிதுநிறைவேறவேண்டிய ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்று திரு. த. குலசேகரம் பணிவான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரவுதிருவிழாக்களை 8 மணிக்குள் பூர்த்திசெய்வதற்கும் இராணுவத்தினர் இணங்கியுள்ளனர்

'ஹெலி'யில் வந்த இராணுவ உயரதிகாரி கோயில் அறங்காவலர் சபையினரை இராணுவ முகாமுக்கு அழைத்துக் கலந்துரையாடிவிட்டு மீண்டும் திரும்பிச் சென்றூர். [ச-எ]

## மல்லாகத்தில் — கனேடிய உதவியுடன் குழாய்க் கிணறுகள்

யாழ்ப்பாணம், வியா

கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் மல்லாகம் கிராம சபைப்பகுதியில் பத்துக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக கொழும்பிலுள்ள கனேடிய தூதராலயம் 18,000 ரூபா உதவி வழங்கியுள்ளது. பிரிட்டிஷ் நிறுவனமான குழந்தைகளைக் காப்பாற்றும் நிதிப்பிரிவு இத்திட்டத்தை அமுல் நடத்தவிருக்கிறது.

இந்தக் குழாய்க் கிணறுகளுடன் தண்ணீர் இறைக்கும் காற்றுடி இயந்திரம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் இம்மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு விரைவில் செயல்படவிருக்கிறது.

மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு எஸ். ஸ்ரீபாஸ்கரன் இதற்காக கனேடிய மக்களுக்கும் கனேடிய தூதராலத்துக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இன்னும் 90 குழாய்க்கிணறுகள் அடுத்தவருடம் மார்ச் மாதத்துக்குள் இப்பகுதியில் சட்டப்படவிருப்பதாகத் தெரியவருகிறது. (மா-இ)

## திருமலை, அம்பாறை — ஊர்காவல்படை, கொமாண்டோக்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியாழன்

மட்டக்களப்பிலுள்ள மத்திய பொலிஸ் நிலையத்திற்காக ஊர்காவற் படையினர் ராணமடு என்னுமிடத்தில் நேற்றிரவு 'சென்ரி'க்கு நின்ற சமயம் தமது போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஊர்காவற்படையில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும், புதிய துப்பாக்கிகள் மூன்று தம்மால் கைப்பற்றப்பட்டன என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

### திருகோணமலையில்

திருகோணமலை மாவட்டம் திரியாயிலுள்ள வீதியொன்றில் சிங்கள ஊர்காவற் படையினர் 10 போவரையில் எம்மக்களிடமிருந்து பொருட்களைக் கொள்ளையடிப்பதற்காக மறைந்திருந்தனர். இதனையறிந்த எமது வீரர்கள் சிலர் அவ்விடத்தை அண்மித்தபோது ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் துப்பாக்கியுடன் வெளியே இருந்தார். அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். மற்றவர்கள் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனர் கொல்லப் பட்டவரின் துப்பாக்கி எம்மால் கைப்பற்றப் பட்டது.

### அம்பாறையில்

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் இராணுவ முகாமிலிருந்து நேற்று முன தினம் மாலை 5-30 மணியளவில் ஒரு ஜீப் வண்டியிலும், ஒரு ஸ்கவுட் காரிலுமாக கொமாண்டோக்கள் சிலர் ரோந்துசென்ற சமயம் முகாமுக்கு அண்மையில் வைத்து எமது வீரர்கள் ஜீப் வண்டி மீது கிறனேட் தாக்குதல் நடத்தியதில் ஜீப் வண்டியிலிருந்த கொமாண்டோக்களில்இருவர் பலத்த காயங்களுக்குள்ளானுர்கள். இத்தாக்குதலினுல் இவர்கள் நிலைகுலைந்தனர். எமது தரப்பில் இத்தாக்குதலின்போது எதுவித இழப்புகளும் இல்லை',. (மா-ஒ)

## வெற்றுத் தோட்டாக்களுடன் கைது

கொழும்பு, புதன்

பொலநறுவை மாவட்டத்தில் ஜே வி பி இயக்கத்தை சேர்ந்தவரென சந்தேகிக்கப்படும் எம் குணபாலா என்பவரை படையினர் கைது செய்துள்ளனர். அவரின் வீட்டிலிருந்து பாதுகாப்பு படையினர் 1008 வெற்று தோட்டாக்களைக் கைப்பற்றியதாகவும் அரசாங்கம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த வெற்று தோட்டாக்களில் வெடிமருந்துகளை நிரப்பிக் கொண்டிருந்த போதே அங்கு சென்ற படையினர் அவரை கைது செய்தனராம்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இம்மாவட்டததில் மதுரகிரிய என்னுமிடத்தில் மயானமொன்றில் வைத்து ஒருவர் வெற்றுத் தோட்டாக்களில் வெடிமருந்துகளை நிரப்பும் போது கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [சி - இ]

## பிடிவிருந்து இல்லாமல் — ரயில் ஊழியர், பயணிகளை கைதுசெய்ய அனுமதி

கொழும்பு, புதன்

ரயில் பிரயாணிகளை பிடிவிருந்து இல்லாமல் இனிமேல் கைது செய்வதற்கான அனுமதியை ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு போக்குவரத்து அமைச்சு வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ரயில்வே திருத்தச் சட்டமூலம் தொடர்பாக உரையாற்றுகையில் போக்குவரத்து அமைச்சர் திரு. எம். எச். முகமட் இத்தகவலைத் தெரிவித்தார்.

ரயில்வேபகுதி உடமைகளை சேதமாக்குவோரை விசாரிக்க சோதனையிட பிடிவிருந்தின்றி பிரயாணிகளை கைதுசெய்வதற்கு இவ்வதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டமூலம் ரயில் பிரயாணிகளின் சொந்த நலன்களை பாதிப்பதால் பல தீயவிளைவுகள் ஏற்படலாமென்றுஎதிர்க்கட்சிகள் பலத்த கண்டனம் தேர்வித்துள்ளன. [சி-இ]

## யாழ். மாவட்டத்தில் — 30 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிட முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் காலபோகத்தில் 30ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெல்பயிரிடப்படும்

யாழ் மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றபோது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

இதற்கு முன்னைய காலங்களில் விதை நெல் பெறப்பட்டதைப்போல் தற்சமயம் பெறமுடியாததால் காலபோக விதைநெல்லை யாழ். மாவட்டத்தில் வைத்திருக்கும் விவசாயிகள் ஒருவருக்கொருவர் பங்கிட்டுக்கொள்ளவும்.

1986—1987 ஆண்டு காலப் பகுதிக்கான விரிவான விவசாயத் திட்டமொன்று வரையப் பெற்றது.

இக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள், கமநலச் சேவை, விவசாய, நீர்ப்பாசன, தெங்கு அபிவிருத்தி, வங்கி, கூட்டுறவு அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-இ)

## 'கொல்வின்' வீட்டின் மீது குண்டுவீச்சு!

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வாவின் வீட்டின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதவர்களால் குண்டு ஒன்று வீசப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஆயினும் அதிர்ஷ்டவசமாக இக்குண்டு வெடிக்கவில்லை (சி)

## வவனியாவில் — ஐந்து லொறி மருந்துகள் தேங்கியுள்ளது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட ஐந்து லொறி நிரம்பிய மருந்து வகைகள் வவனியாவில் கடந்த இரண்டு மாதங்களாக தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கும் குடாநாட்டில் உள்ள இதர ஆஸ்பத்திரிகளுக்கும் கொழும்பில் இருந்து ஐந்து லொறிகள் நிரம்பிய சகல விதமான மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அவை வவுனியாவிற்கு வந்து இரண்டு மாதங்களாகியும் அங்கேயே கிடக்கின்றனவாம்.

சில மருந்து வகைகள் உடனுக்குடன பாவிக்க வேண்டியவையாக இருந்த போதிலும் அவற்றை அனுப்பி வைக்கும் முயற்சியை உரியவர்கள் எடுக்கவில்லை எனத்தெரிகிறது [ச - இ]

## பொறுப்பதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். பண்ணை ஆஸ்பத்திரியில் இனந்தெரியாத நபர்களினுல் எடுத்துச் செல்லப்பட்ட தளபாடங்களை நோயாளர் நன்மை கருதி திருப்பி ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் யாழ் பண்ணை ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர். இந்திரராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ]

## 'இராணுவமுகாம் செல்வது தவிர்க்கப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா.

தற்போதைய சூழ்நிலையில் இராணுவ முகாமுக்கு செல்வது பாதுகாப்பில்லாமல் இருப்பதால் இராணுவ முகாமுக்கு செல்வது தவிர்க்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கிளிநொச்சி முரசுமோட்டை செயலக கட்டடத்தில் நேற்று நடந்த கிளிநொச்சி மாவட்ட கிராமசேவை அலுவலர் சங்க அவசர பொதுக் கூட்டத்தில் நிறைவேறியது.

இதுபற்றி கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

அண்மையில் கிளிநொச்சியில் நடந்த அசம்பாவிதத்தில் ஷெல் தாக்குதலுக்குள்ளாகி இறந்த கிராமசேவை அலுவலர் செ. வேலாயுதத்திற்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

காரணம் காட்டப்படாமல் திடீரென பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட கிளிநொச்சி கிராமசேவை அலுவலர் திரு. சி. தனபாலசிங்கத்திற்கு வேலை வழங்கப்பட வேண்டும் அவர் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். [இ]

## கிளிநொச்சி உணவு முத்திரைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

கிளிநொச்சி பகுதிக்கான உணவு முத்திரைகளை நேற்று முன்தினம் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து மேலதிக அரசாங்க அதிபர் திரு. அமிர்தலிங்கம் எடுத்து வந்து உதவி அரசாங்க அதிபர் திரு. வேலுப்பிள்ளையிடம் கையளித்துள்ளார்.

அடுத்த வாரம் முதல் இவ் உணவு முத்திரைகள் அப்பகுதிகளுக்கான கிராமசேவையாளர்கள் மூலம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி -இ]

## மகாசங்கத்தின் மாநாடு

கொழும்பு, புதன்

உத்தேச மாகாண சபைகள் திட்டம் தொடர்பாகபெளத்த மகாசங்கத்தினரின் மாநாடு ஒன்று இன்று மாலை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கம் பற்றி ஜனுதிபதிஜெயவர்த்தனு விளக்கி கூறுவார். (சி-ஊ)

## யாழ். வரும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் கப்பல் விரைவில் யாழ்ப்பாணம் வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உரம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், கமலநலசேவை நிலையங்கள் மூலமாகவே விநியோகிக்கப்படும். (ச-இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ் தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.